සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல**<br>**My No** DSD/HO/09/CBO/சுற்றறிக்கை | ඔබේ අංකය<br>**உமது இல**<br>**Your No** ........................................... | දිනය<br>**திகதி**<br>**Date** .2018.03.08 |

சகல மாவட்ட செயலாளர்கள்/ மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்,
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களும் செயலாளர்களும்,

சமுர்த்தி சுற்றறிக்கை:- 2018/06/சமுதாய அடிப்படை/07/2018/02

## சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் வருடாந்த பொதுக்கூட்டத்தினை நடாத்துவதும் பதிவைப்புதுப்பித்தலும்.

**01. அறிமுகம்:-**

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் 09 மற்றும் 15ஆம் பிரிவுகளுக்கு ஏற்றதாக தாபிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் பிரதேச அமைப்புக்களின் பொதுக்கூட்டத்தினை நடாத்துவதற்கு மற்றும் பதிவை புதுபித்தல் என்பவற்றுக்குறிய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இச்சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்படுகின்றது.

**02. வருடாந்த பொதுக்கூட்டத்தினை நடாத்துதல்.**

2.1. 2017ஆம் ஆண்டின் மார்ச் 07ஆம் திகதியின் 2009/8 என்ற இலக்கத்தினையுடைய இலங்கை சனநாயக்க சோசலிஷக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் உள்ளடங்கியுள்ள 4(1) (அ) கட்டளைகளின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அமைப்பு விதி மற்றும் நிருவாக கட்டமைப்பின் 11வது பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பும் வருடாந்த பொதுக்கூட்டத்தினை ஒரு கலண்டராண்டில் முதலாவது காலாண்டிற்குள் நடாத்த வேண்டியுள்ளது.

2.2. இந்த அதிவிசேட வர்த்தகமானியில் உள்ளடங்கியுள்ள 4(1) (ஆ) கட்டளைகளின் பிரகாரம் பிரசுரிக்கப்பட்ட சமுர்த்தி பிரதேச அமைப்பின் அமைப்பு விதி மற்றும் நிருவாகக்கட்டமைப்பின் 11வது பந்திற்கமைய ஒவ்வொரு சமுர்த்தி பிரதேச அமைப்பும் வருடாந்த பொதுக்கூட்டத்தினை ஒரு கலண்டராண்டில் முதலாம் தவணைக்குள் நடாத்தப்பட வேண்டியுள்ளது.

2.3. மேலே 2.1 மற்றும் 2.2இன் பிரகாரம் செயற்படும் பொருட்டு சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களினதும், சமுர்த்தி பிரதேச அமைப்புக்களினதும் வருடாந்த பொதுக்கூட்டத்தினை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

2.4. மேலே 2.3 இன் பிரகாரம் வருடாந்த பொதுக்கூட்டத்தினை நடாத்தும் பொது கீழ் குறிப்பிடப்படும் பணிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(அ) புதிய கட்டுப்பாட்டுச் சபையினை தெரிவு செய்துகொள்ளல்.
(ஆ) கடந்தாண்டின் கணக்குகளின் (வருமானம் மற்றும் செலவறிக்கை) பொருட்டு அங்கத்தவர்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல்.
(இ) கடந்த ஆண்டின் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையின் பொருட்டு அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளல்.
(ஈ) வருடாந்த அங்கத்தவர் கட்டணத்தை தீர்மானித்து அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2.5. வருடாந்த பொதுக்கூட்டத்தின் பின்னர் நடாத்தப்படுகின்ற முதலாவது மாதாந்த பொதுக்கூட்டத்தின் போது முன்வரும் வருடத்தின் பொருட்டான செயற்பாட்டுத்திட்டமிடலை தயாரித்து கூட்டத்தில் நிறைவேற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**03. சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் வருடாந்த பதிவினை புதுப்பித்தல்.**

3.1. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவாகி பதிவுச்சான்றிதழ்களைப் பெற்றுள்ள சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களினதும் செயலாளர்களால் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் பதிவினை புதுப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தின் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து (இணைப்பு-01) 2018 ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னர் தலைமையக சமுர்த்தி முகாமையாளலுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(அ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர், செயலாளர், அங்கீகரித்த பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் வருமானச் செலவு அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும்.

(ஆ) புதிய அங்கத்தவர் பெயர்ப்பட்டியல்.

(இ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் புதிய நிறைவேற்றுக் குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விருப்பத்தினைத் தெரிவித்து புதிய நிறைவேற்றுக் குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் (இணைப்பு 02)

(ஈ) சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பதிவினை புதுப்பிற்கும் பொருட்டு 300/= ரூபா கட்டணம் செலுத்தியதாக சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுதிப்பாட்டுக் கடிதம். (இணைப்பு 03)

3.2. **சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவாகி சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுள்ள சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களினது செயலாளர்களினால் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களுடன் பதிவினை புதுப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தினை இரு பிரதிகளுடன் பூரணப்படுத்தி (இணைப்பு 04) 2018 ஜூன் 30ம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை மற்றும் விளையாட்டுப் பரிவின் பணிஒப்பாளருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.**

(அ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளரால் அங்கீகரித்த பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் வருமானச் செலவு அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று.

(ஆ) பதிவு இலக்கத்துடன் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பெயர்ப்பட்டியல்.

(இ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் நிறைவேற்றுக் குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விருப்பத்தினைத் தெரிவித்து புதிய நிறைவேற்றுக்குழுவிற்கு தெரிவான அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல்.

(ஈ) சமுர்த்தி பிரதேச அமைப்பின் பதிவினை புதுப்பிக்கும் பொருட்டு ரூபா 300/= இற்கான கட்டணம் செலுத்தியதாக சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட உறுதிப்பாட்டுக்கடிதம் (இணைப்பு 05)

3.3. சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கும் கடந்த ஆண்டில் பதிவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளதனால் அந்த இலக்கதிலிருந்து மேற்சொன்ன சமுதாய அடிப்படை அமைப்பின் பதிவினை புதுப்பித்ததாக ஒரு கடித்தினை பணிப்பாளரால் தலைமையதிபதிக்காக மேற்கொள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புச் சொந்தமான அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச செயலாளரால் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படல் வேண்டும். (இணைப்பு 06)

3.4. சகல சமுர்த்தி பிரதேச அமைப்பின் பொருட்டு கடந்தாண்டில் பதிவு செய்து சான்றிதழ் ஒன்றினை வழங்கியுள்ளதால் அந்த இலக்கத்திலிருந்து மேற்கொள்ள பிரதேச அமைப்பின் பதிவினை புதுப்பித்ததாக ஒரு கடிதத்தினை பணிப்பாளர் தலைமையதிபதி/ சமுதாய அடிப்படை அமைப்புப் பணிப்பாளரால் சமுர்த்தி பிரதேச அமைப்பின் தலைவருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்காக குறித்த பிரதேசத்தின் பிரதேச செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (இணைப்பு 07)

**04. நடைமுறை ரீதியான தேவைப்பாடுகள்.**

இச்சுற்றறிக்கையினால் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு ஏற்றதாக செயற்படும் போது நடைமுறையில் உருவாகும் தேவைகள் தொடர்பில் செயற்படுவதற்கு முன்னர் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு தொடர்பில் பிரதேச செயலாளரிடமிருந்தும் சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்தும் எழுத்து மூலம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு அதற்கமைய செயற்படல் வேண்டும்.

**குறிப்பு:-**

இச்சுற்றறிக்கை தொடர்பில் ஏதேனும் விளக்கம் தேவைப்படின் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்பின் பிரதிப்பணிப்பாளருக்கு தாமதமின்றி தொடர்பு கொள்ளவும் (தொலைபேசி இலக்கம் 0112873794, 0714118226)

கலாநிதி. சுனில் ஜயந்த நவரத்ன
பணிப்பாளர் தலைமையதிபதி.

பிரதிகள்:-

1. சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் கௌரவ அமைச்சர் திரு எஸ்.பி. திசாநாயக்க அவர்கள் -த.கூ.க.பொ
2. சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் கௌரவ பிரதியமைச்சர் திரு ரஞ்சன் ராமநாயக்கா அவர்கள் -த.கூ.க.பொ
3. செயலாளர், சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு -அ.கொ.பொ
4. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு -அ.கொ.பொ
5. மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு -அ.கொ.பொ
6. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிரத்தி திணைக்களம் -அ.கொ.பொ
7. பிரதான உள்ளக்கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -அ.கொ.பொ
8. சகல பணிப்பாளருக்கும், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் -அ.கொ.பொ

Translated By : .M.M.M.JAWHAR. (Translator)